ஆண்டு சந்தா ரூ. 60/–

மலர் : 7

இதழ் : 2

டிசம்பர் – 2010

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்



**தேவன்**

**தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

யோவான் 3 : 16

ஆசிரியர் **சகோ. வே. தேவதாஸ்**



# கிராம ஆலயம்

# பாரேவா

## குஜராத்

குஜராத்தில் ஜாலோத் தாலுகாவில் பாரேவா என்றகிராமம் அமைந்துள்ளது. இந்த பகுதி மக்கள் அதிகமாய் வீட்டிற்கு வீடு சாராயம் காய்த்து குடிப்பதும், விற்பதும் முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். ஒருவரோடுடொருவர் சண்டையிடுவதிலும், பழிக்குப்பழி வாங்குவதிலும் கொடூரமானவர்கள். மந்திரவாதிகளையும், பூஜாரிகளையும் நம்பி வாழ்பவர்கள். இந்த கிராமத்தைச் சேர்ந்த ராம்சிங்பாய் என்பவர் ஒரு சாராயம் விற்பவர். இவர் மனைவி மிட்டோடிபேன் 21 வருடங்களாக பில் சூனியக் கட்டினால் பாதிக்கப்பட்டு அவதியுற்றாள். 1991ம் ஆண்டு இவர்கள் மிஷனெரி சகோ. தேவதாஸ் அவர்களைக் குறித்து கேள்விப்பட்டு ஜாலோத்திலுள்ள அவர்கள் வீட்டிற்கு சென்று ஜெபித்தபோது 9 பிசாசுகள் இவளை விட்டு ஓடியது. பின்பு ராம்சிங்பாய் மனம் மாறி சாராயம் காய்த்து விற்கின்ற தொழிலை விட்டுவிட்டு குடும்பமாக இயேசுவை விசுவாசித்தார்.

இவர்கள் தான் முதன் முதல் இந்த கிராமத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள். பின்பு இந்த கிராமத்தைச் சேர்ந்த நூர்ஜிபாய் தன்னை அர்ப்பணித்து 3 வருடம் ஊழியம் செய்து வந்தார். இவர் தன்னுடைய நிலத்தை காணிக்கையாகக் கொடுத்தார். தேவ நாமம் மகிமைப்படும்படியாய் ஒரு ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடந்து வந்தது. தற்போது விசுவாசிகள் அதிகமான காரணத்தினால் ஆலயத்தில் ஆராதிக்க இடம் போதவில்லை, ஆகவே ரூ. 3.5 இலட்சம் செலவில் புதிதாக பெரிய ஆலயம் சகோ. ஹவ்சிங் சங்காடா அவர்கள் சொந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில் ஷாலோம் போதகர் Rev. ஹவ்சிங் சங்காடா தேவ வல்லமையோடும், தரிசனத்தோடும் ஊழியம் செய்து கொண்டு இருக்கிறார். இங்கு சுமார் 70க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்த ஆலயம் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களால் 11.11.2010 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. **இந்த கிராம ஆலயம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் கட்டப்பட்ட 100 வது கிராம ஆலயமாகும்.**

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

**"இயேசு கிறிஸ்து இரட்சகர் தாவீதின் ஊரில் பிறந்தார்"** என்ற நற்செய்தி நமக்கு மட்டுமல்ல சகல ஜனங்களுக்கும் கொடுக்கப்படவும், அறிவிக்கப்படவும் வேண்டிய ஒன்றாகும். ***"இயேசு பிறந்தார்"*** என்ற முதல் வருகையின் செய்தியை ஒருமுறை கூட கேள்விப்படாத நம் தலைமுறையில் வாழும் ஜனங்களுக்கு 2ம் வருகை மிக சமீபம் என்று வானத்தை பார்த்துக் கொண்டிருக்கும் நாம் சபையாக என்ன செய்யவேண்டும் என்பது நமக்கு அனுகூலமாக அமையட்டும்.

தேவகிருபையால் நவம்பர் 8–11 வரை நம் சுதேச ஊழியர் குடும்ப முகாமும் அதை தொடர்ந்து நவம்பர் 11,12 நாட்களில் சகோ மோகன் சி. லாரசஸ் அவர்களின் பணித்தள வருகை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. சிறப்பு அறிக்கையை வாசித்து தேவனை துதியுங்கள்.

டிசம்பர் மாதம் பீல் மக்கள் கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கும் மாதமாக கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு விசுவாசிகளும் 5 குடும்பங்களுக்கு இயேசுவின் அன்பையும், அவரது பிறப்பையும், தேவன் தங்களுக்கு செய்த அற்புதத்தையும் பகிர்ந்து கொண்டு தேவனண்டை நடத்த ஜெபத்துடன் பிரயாசப்படுகிறோம். மேலும் கிராமங்கள் தோறும் நடைபெறவுள்ள வீடு சந்திப்புகள், கிறிஸ்துவின் பிறப்பு நற்செய்தி கூடுகைகள், கிறிஸ்துமஸ் ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமையவும், எந்த பிரச்சனைகள் எதிர்ப்புகள் வராதபடி தேவனுடைய பாதுகாவலுக்காக ஜெபியுங்கள்.

குறிப்பாக நம் சுதேச ஊழியர்கள், அலுவலக ஊழியர்கள், Project ஊழியர்கள் தூத்துக்குடி அலுவலக ஊழியர்கள் மற்றும் முன்னேற்ற பணியாளர்கள் 525 பேர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதியாக நல்ல உடைகள் வழுங்கப்படவேண்டும். மேலும் ஊழியர்களின் குடும்பங்கள், நாம் தாங்குகிற பீல் ஆதிவாசி மாணவர்கள் என சுமார் 1800 பேருக்கு உடைகள் மற்றும் கிறிஸ்துமஸ் வெகுமதிகள் வழங்கப்படவேண்டும். அதற்காக சுமார் 8 இலட்சம் தேவைப்படுகிறது. குறிப்பாக இந்த தேவைக்காக ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன். உங்கள் கிறிஸ்மஸ் வெகுமதியை டிசம்பர் மாத ஆதரவுத் தொகையுடன் சேர்த்து கொடுபீர்களானால் நாங்கள் ஊழியர்களுக்கு விரைவாக வெகுமதிகளைக் கொடுக்க வசதியாக இருக்கும்.

**"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்".** மத்தேயு 1:21. சமாதான பிரபு இயேசு கிறிஸ்து தாமே உங்கள் யாவருக்கும் சமாதானம் சந்தோஷம் கட்டளையிடுவாராக.

***தேவ ஆசீர்வாதம் நம் அனைவரோடும் தங்கியிருப்பாதாக! ஆமென்.***

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**



# உலகத்தில் வெளிப்பட்ட தேவ அன்பு

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**1. ஒருவரும் கெட்டுப் போகாதபடி நித்திய ஜீவனை பெற வெளிப்பட்ட தேவ அன்பு**

தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்து ஏற்ற துணையை உருவாக்கி ஏதேன் தோட்டத்தில் அவர்களுடன் உறவாடி ஐக்கியமாயிருந்தார். ஆனால் பாவம் பிரவேசித்தபோது, சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு பிரிவினை உண்டானது. தொடர்ந்து உலகத்தில் மனுபுத்திரர்கள் பாவம் செய்தபடியால் தேவன் தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:6) என்று வேதம் சொல்லுகிறது. ஆனாலும் தேவன் மனுபுத்திரர் மீது மனதுருக்கம் கொண்டார். நோவாவுடன் உடன்படிக்கை செய்தார். ஆபிரகாமை தெரிந்து கொண்டு தம் சொந்த ஜனமான இஸ்ரவேலரை நேசித்தார். பல முறை வழி வலகி சென்றாலும் அவரை துக்கப்படுத்தினாலும், தமக்கு விரோதமாக அவர்கள் பாவம் செய்தாலும் இஸ்ரவேலரை நேசித்தார். இதிலிருந்து அவருடைய அன்பு வெளிப்படுகிறது. இஸ்ரவேலருக்கு மட்டுமன்றி புறஜாதிகள் மீதும் தேவன் கரிசனையுள்ளவர். **"வலதுகைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ?"** (யோனா 4 :11) என்று தேவன் கூறுகிறார். மேலும் ஒருவரும் கெட்டுப் போக வேண்டாம் என்று தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். ஆகவே முழு மனுக்குலத்தை இரட்சிக்க தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். பரிசுத்த பவுல் சொல்கிறார் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ 2:4) நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனை அறியாத வேளையில் நாம் கெட்டுப் போகாதபடி தேவ அன்பு இயேசுவின் மூலமாக வெளிப்பட்டபடியால் தேவனைத் துதிப்போம். நமக்கு நித்திய ஜீவனையும் சமாதானத்தையும் தரும்படியாக அவர்தம் ஒரே பேரான குமாரன் இயேசுவை அனுப்பினதால் தேவ அன்பு வெளிப்பட்டது.

**2. உலகத்தில் உள்ள அனைவரையும் நேசிக்கும் தேவ அன்பு**

***"உலகத்தில் அன்பு கூர்ந்தார்"*** (God So Loved the World) என்று வாசிக்கும் போது நம் இருதயத்தில் தேவன் தரும் ஒரு சிந்தை என்னவென்றால் எனக்காக மட்டும் இந்த நற்செய்தி அல்ல. உலகமனைத்திற்கும் அனைத்து நாட்டவர், அனைத்து ஜாதியினர் அனைத்து

பாஷைகாரர்களுக்கும் வெளிப்பட்ட தேவ அன்பு. எனவே இந்த கிறிஸ்மஸ் நற்செய்தி உலகமெங்கும் எடுத்துச் செல்லப்படவும், சொல்லப்படவும் வேண்டும். கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சிகளை தொடர்ந்து வேதத்தில் பார்க்கும்போது

***நட்சத்திரம்*** சாஸ்திரிகளை இயேசுவண்டை வழி நடத்தியது.

***தேவ தூதர்கள்*** பரலோக மகிழ்ச்சியுடன் மேய்ப்பர்களிடம் நற்செய்தியை அறிவித்தார்கள்.

***மேய்ப்பர்கள்*** தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எங்கும் பிரசித்தம் செய்தார்கள்.

இந்த உலகம் முழுவதும் இயேசுவின் அன்பின் செய்தி அறிவிக்கப்படவேண்டும் என்பதுதான் பிதாவின் சித்தம். நாமும் பிதாவின் சித்தம் நிறைவே அறிவிக்கும் பாத்திரங்களாக விளங்குவோம்.

**3. இவ்வளவாய் அன்பு கூர்ந்த ஈகையாம் தேவ அன்பு**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு தேவனுடைய அன்பையும், ஈகையையும் காட்டுகிறது. ஒரேபேறான குமாரனை அவர் தந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இவ்வளவாய் என்று சொல்லும்போது தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் சென்று மரிக்கும் அளவிற்கு ஒப்புக் கொடுத்தது ஈகையை வெளிப்படுத்தின அன்பாகும். இன்று நாமும் நம்மை நேசித்த ஆண்டவரை நாம் எவ்வளவாய் நேசிக்கிறோம்? அந்த அன்பிற்கு ஈடாக நாம் என்ன செய்கிறோம்? என்னை நேசிக்கின்றாயா? என்று அன்பர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார். அந்த தேவ அன்பு நமக்குள் இருக்கும்போது, கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தியை நாமும் பகிர்ந்து கொள்ள, மற்றவர்களின் மீது தெய்வீக அன்பு ஏற்படும். அதற்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் தியாகம் பண்ணவும் நம்மை ஏவும். நீங்கள் கிறிஸ்துவின் நற்கந்தமாய் இருக்கிறீர்கள் என்ற வார்த்தையின்படி உலகத்திற்கு உப்பாக, ஒளியாக நற்கந்தமாக விளங்க நம்மை அர்ப்பணிப்போம்.


| *நமது ஷாலோம் கிளை அலுவலகங்கள்* | |
|---|---|
| மார்த்தாண்டம் | ***Bro. G. Selvadurai***<br>Kalikal House, Near A.G.Church<br>Gnaramvilai, Pacode.P.O<br>K.K Dist, Tamil Nadu 629168<br>Cell : 94876-89869 |
| சென்னை | |
| ***Bro. B. Ebenezer Daniel***<br>New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094<br>Cell : 934 44-75468 | ***Bro. D. Diaz Bose***<br>No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024<br>Cell : 90427-80315 |

# ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்

## கிறிஸ்துமஸ் பாடல்

லூக்கா 2:8–16

பாடல் : நாகூம் டேட்
ராகம் : ஜார்ஜ் F. ஹேண்டல்

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண்ஜோதி கண்டனர்.

2. அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண்தூதன்: ''திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்.''

3. ''தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்.''

4. ''இதுங்கள் அடையாளமாம்,
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்.''

5. என்றுரைத்தான்; அஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6. ''மா உன்னதத்தில் ஆண்டவா,
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்.''

**"கர்த்தருடைய மகிமை மேய்ப்பர்களைச் சுற்றிலும் பிராகாசித்தது"**

புரோடெஸ்டென்ட் கிறிஸ்தவ சபை உருவான 16–ம் நூற்றாண்டிலிருந்து 18–ம் நூற்றாண்டு வரை, திருச்சபையின் பாடல்கள் அனைத்தும் ''ஸ்டெர்ன்ஹோல்ட் ஹாப்கின்ஸ் சால்ட்டர்'' என்ற சங்கீதங்களின் அமைப்பில் பாடப்பட்டன. இப்பாடல்கள் கரடுமுரடான அமைப்பாக இருந்ததால், அவற்றைப் பாடுவது கடினமாக இருந்தது. எனவே, சங்கீதங்களை நவீன முறையில் மாற்றியமைத்து, எளிதில் பாடும்படி அமைக்க, 1696–ம் ஆண்டு, இங்கிலாந்தின் அரசவைக் கவிஞர்களான நாகூம்டேட்டும், நிக்கோலஸ் பிராடியும் முயற்சி எடுத்தனர்.

கடும் எதிர்ப்புகள் மத்தியில், வில்லியம் அரசனின் ஆதரவுடன், இப்புதிய அமைப்பு சங்கீதங்கள் இங்கிலாந்து திருச்சபையில் உபயோகப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து, 1700–ம் ஆண்டு, சங்கீதங்களின் மற்றொரு துணைத் தொகுப்பையும் வெளியிட்டனர். இத்தொகுப்பில், சங்கீதங்களைத் தவிர, 16 பாடல்களையும் அறிமுகம் செய்தனர். இவற்றில் இப்பாடலும் ஒன்று.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியில் வரும், ''தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கு இயேசு பிறந்த நற்செய்தியை அறிவிக்கும் சம்பவத்தை'', எளிய நடையில் கிறிஸ்மஸ் கீதமாக இப்பாடலில் எழுதினார்கள். மற்றப் பாடல்களனைத்தும் காலத்தினால் அழிக்கப்பட்டுப் போயினும், இந்த கிறிஸ்மஸ் பாடல், பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்மஸ் தரும் உண்மையான மகிழ்ச்சியை சுட்டிக் காட்டும் பாடலாக விளங்குகிறது.

நாகூம் டேட் 1652–ம் ஆண்டு, அயர்லாந்தைச் சேர்ந்த டப்ளினில் வாழ்ந்த போதகரின் மகனாகப் பிறந்தார். லண்டனின் திருத்துவ இசைக் கல்லூரியில் படித்துத் தேறினார். 1690–ம் ஆண்டு, ''இங்கிலாந்து தேசப் புலவர்'', என்ற சிறப்புப் பட்டமும் பெற்றார். ஆனால், அவரது குடிப்பழக்கமும், ஊதாரித்தனமான செயல்களும் அவரது வாழ்வைக் கெடுத்தன. இறுதியில், 1715–ம் ஆண்டு லண்டனில், ஒரு கடன்பட்டோரின் அகதி இல்லத்தில், பரிதாபமாக மரித்தார். அவருடைய உற்ற நண்பரான பிராடியோ, தன் வாழ்நாள் முழுவதும், போதகராக, ஆண்டவருக்குச் சேவை செய்தார். இப்பாடலுக்கு, புகழ்பெற்ற ஜார்ஜ் F. ஹேன்டல் அமைத்த ராகத்தை, ''கிறிஸ்மஸ்'' என்ற தலைப்பில் இணைத்தனர்.

**சகோ. அணில் டோடியார் அஹோரியாபாடா – இராஜஸ்தான்**

பிரகாஷ்பாய் என்ற சகோதரருக்கு கை, கால்கள் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு செயல்படாமல் இருந்தன. எண்ணெய் பூசி பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. பாபுலால் மச்சார் டாண்டி சோட்டி – இராஜஸ்தான்**

பாலா டாமோர் என்ற சகோதர் உடம்பு முழுவதும் புண்கள் மற்றும் கட்டிகளினால் அவதிப்பட்டு வந்தார். மருத்துவம் பார்த்தும் பலனில்லை. ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொத்தார்.

**சகோ. பாதர் பாரியா கோய்க்கா – இராஜஸ்தான்**

மான்சிங் என்ற சகோதரருக்கு அசுத்த ஆவியின் பிடியினால் புத்தி சரியில்லாமல் போனது. மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் பார்த்தும் பலனில்லை. விசுவாசி ஒருவர் மூலம் சபையைக் குறித்துக் கேள்விப்பட்டு சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையையும், சகோதரருக்கு நல்ல மனநிலையையும் கொடுத்தார்.

**சகோ. மண்ணு மேடா நெல்சூர் – குஜராத்**

டித்தாபாய் என்ற சகோதரருக்கு சரீரம் முழுவதும் வீக்கம் ஏற்பட்டிருந்தது, மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்தபோது இரண்டு சிறுநீரகமும் பழுதடைந்துள்ளது தெரியவந்தது. அதன்பின் இந்த சகோதரர் தனது பாவங்களை அறிக்கை செய்து விசுவாசித்து ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் நல்ல சுகத்தை உடலில் தந்துள்ளார்.

**சகோ. சாகன் H. காமோல் வாங்கட் – குஜராத்**

காளிபேன் என்ற சகோதரி நான்கு மாதங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, வயிற்றுவலி ஏற்பட்டு அதிகமாக கஷ்டப்பட்டு வந்தார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்து, வயிற்று வலியை நீக்கினார்.

**சகோ. சாகன் பார்கி மத்வா – குஜராத்**

சுக்ரம்பாய் என்ற சகோதரர் வயிற்றில் 2 வருடமாக கட்டி இருந்தது. அநேக மருந்துகள் சாப்பிட்டும், மந்திர கிரியைகள் செய்தும் எந்த பலனுமில்லை. ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது., தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. குல்லா M. டாமோர் சரோஜலி – மத்தியப்பிரதேசம்**

அனிதா பேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி 7 வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லை. ஆலயத்திற்கு வந்து பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் ஒரு ஆண் குழந்தையை தந்து ஆசீர்வதித்துள்ளார்.

**சகோ. கேம்சந்த் குண்டியா நகேடியா – மத்தியப்பிரதேசம்**

பாலாபாய் என்ற சகோதர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். மேலும் சளி இருமல் நோயினால் மிகவும் கஷ்டப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது வேதன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

## ஷாலோம் ஜெபக் கூடுகைகள்

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்றுவருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *டிசம்பர் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 07.12.2010 | முதல் செவ்வாய் | மாலை 7 மணி | **சகோ. தங்கராஜ்,** 4/172, C.G.E. காலனி, 4 வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9942807016 |
| 10.12.2010 | இரண்டாம் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 04.12.2010 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 18.12.2010 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 29.12.2010 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது, தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

***"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக".*** **சங்கீதம் 138:8**

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்....

*அன்பார்ந்த ஷாலோம் பங்காளர்களே,*

*அன்பரால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்....*

SUdLôn éª«úX TôXL]ôn ©\kÕ, At×ReLû[Ùm A§NVeLû[Ùm CkR éª«úX ùNnÕ, TôÓThÓ, £ÛûY«úX U¬jÕ, APdLmT i QlThÓ, êu\ôm Sô°úX E«ojùRÝkR B i PYo CúVÑ ¡±vÕ®u ©\kR Sô[ôL Sôm ùLô i PôÓYÕ ¡±vUv §]Uô Ïm. CkR ¡±vUv §]jûRd ùLô i PôP CúVÑ ¡±vÕûYd Ï±jÕ §Vô²jÕ, ù_©jÕ RVôWôYÕ SUÕ LPûUVô Ïm.

YÚPkúRôß m ¡±vUv U]U¡rf£«u SôhL°p SmØûPV ÑúRN F¯VoLÞdÏm AYoLs Uû]®UôoLÞdÏm, AYoLs ©sû[LÞdÏm ×jRôûPLs ùLôÓjÕ, AYoLÞm ¡±vUv-I ùLô i PôP Sôm ER®VôL CÚITRtLôL úRYû]j Õ§d¡ú\ôm. AúR úTôp SmØûPV Ts° Utß m ®Ó§«p T¥jÕYÚm Sm B§Yô£ UôQY, UôQ®LÞdÏm, £ß ©sû[LÞdÏm ×jRôûPLs Utßm ùYÏU§Ls ¡±vUv §]eL°p ùLôÓjÕ YÚ¡ú\ôm.

BLúY CkR B i Ó CkR Lô¬VeLÞdLôL ÑUôo Ì. 8 XhNeLs Yû W úRûYÙs[Õ. BLúY LojRo EeLs Es[j§p H®]ôp JÚ F¯V¬u ÏÓmTj§tÏ Ïû\kRÕ Ì. 1000/- ApXÕ ARtÏ úUXôLúYô, JÚ B§Yô£ ©sû[dÏ Ïû\kRÕ Ì. 500/- ApXÕ ARtÏ úUXôLúYô, ¡±vUv ùYÏU§VôLd ùLôÓjÕ ERY AuTôn AûZd¡ú\ôm.

CkR ùYÏU§ Lô¦dûLLû[ SYmTo Uô Rj§tÏ sú[úV Aàl©]ôp ÑúRN F¯VoLs ÏÓmTj§tÏm, B§Yô£ ©sû[LÞdÏm AuT°lxLû[ ¡±vUvdÏ ØuTôL ùLôÓdL ER®VôL CÚdÏm.

¿eLs ùLôÓdL ®Úm×m Lô¦dûLLû[ úSW¥VôL çjÕdÏ¥ RûXûU AÛYXLj§tÏ Aàl© ûYdLXôm. ApXÕ GeLs `ôúXôm ©W§¨§L°Pm ùLôÓjÕ CWºûRI ùTtßd ùLôs[Üm.

CkR Àp UdL°u NkúRô`júRôÓ ¡±vUv-I YWúYtúTôm! úRY Bº oYôRjûRI ùTtßd ùLôs[Xôm!!




கடந்த ஆண்டு வழங்கப்பட்ட

புத்தாடைகள் மற்றும் அன்பளிப்புகளுடன்

நமது பீல் ஆதிவாசி சிறுவர்களில் ஒரு சிலர்

# அன்பின் வேண்டுகோள்.....

***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***



அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த அக்டோபர் மாதத்தில் நுழைந்திருக்கும் நாம் இந்த ஆண்டு வரப்போகின்ற கிறிஸ்மஸைக் கொண்டாட நாம் ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்து வருகிறார்கள். நாம் அவர்களுக்கு கிறிஸ்மஸுக்காக ஏதாவது செய்தாக வேண்டும். ஆகவே நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசி பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்மஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம், அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **11.12.2010, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**

**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ **M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ **D.D./Cheque** மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை **Sharing Love Mission** என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் **NET TRANSFER** வசதி உங்களுக்கு இருந்தால் **NET TRANSFER** மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் **"V. DEVADASS" (or) Sharing Love Mission** என்ற பெயருக்கு **D.D., (or) Cheque** மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

***கீழ்க் கண்ட வங்கிகளிலும் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

| | |
|---|---|
| **Tamilnad Mercantile Bank**<br>**A/c. No. : 106100710400009** | **Axis (U.T.I) Bank ,**<br>**A/c. No. : 105010100094373** |

**ICICI Bank A/C. No. 613901112799**

## SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## `ôúXôm F¯V BÙs LôX AeLj§]WôL AûZl×

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி ஷாலோம் ஊழியத்தின் ஆயுள் கால அங்கத்தினராக இணையும்படி அன்புடன் அழைக்கிறோம். இந்தத் திட்டத்தில் இணைந்தவுடன் உங்களுக்கு சிறப்புச் சான்றிதழ், மாதம்தோறும் பத்திரிகை, மற்றும் வருடம் ஒருமுறை ஊழிய வளர்ச்சிக் குறித்த சிறப்பு அறிக்கை அனுப்பப்படும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் வரும் நிதியினால் மாதாந்திர செலவினங்கள் ஏற்ற காலங்களில் செய்யப்படவும், நிதி நெருக்கடி நேரங்களை சமாளிக்கவும், ஒரு சிறப்பு வைப்பு நிதியாக வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வருட இறுதிக்குள்ளாக, குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்கப்பட ஜெபித்து வருகிறோம். முதலாவது நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அங்கத்தினராக இணையுங்கள், மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் குறைந்தது 5–லிருந்து 10 பேருக்காவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்த சிறப்பு ரசீதுகளும், ஊழிய அறிமுக அறிக்கைகளும் அனுப்புகிறோம். நீங்கள் இந்தத் திட்டத்திற்காக உதவி செய்து, பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரைவாக கட்டப்பட உதவுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# ஜெபக்குறிப்புகள்

❖ முழு பீல் ஆதிவாசி மக்கள் நம் தலைமுறையில் இயேசுவை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

❖ குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் 3 மாநிலங்களிலும் திருச்சபை ஒருங்கிணைப்புப் பணி நடைபெற்று வருகிறது. தேவன் ஞானம் தந்து அனைவரும் இணைந்து ஒருமனமாகச் செயல்படவும் 3 மாநில ஒருங்கிணைப்பாளர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

❖ Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் Compassion மூலமாக தாங்கப்படும் 605 ஷாலோம் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். கல்விப் பணிக்கான அதிகமான தேவைகள் ரூ. 4 இலட்சம் கிடைக்கப்பெற, இவ்வருடத்தில் மாதம் ரூ. 400 கொடுத்துத் தாங்கும் ஆதிவாசி மாணவ ஆதரவாளர்கள் 200 பேர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

❖ இவ்வருடம் 3 மாநிலங்களில் 85 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவன் ஆதரவாளர்களை எழுப்ப, அனுமதி கிடைத்து தடையின்றி கட்டப்பட, குறிப்பாக அவசரமாகக் கட்டப்படவேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

❖ பணித்தளத்திற்கு தேவையான Media உபகரணங்கள் வீடியோ கேமரா, Audio Recording equipments (Rs.1.5 Lakhs) உடனடியாக கிடைக்கப்பெறவும், Media Department –ல் பணியாற்ற நல்ல ஊழியர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❖ அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் கிடைக்கப்பெறும் ஒவ்வொருவரும் வாசிக்க, ஜெபிக்க, ஊழியங்களைத் தாங்க ஜெபியுங்கள். மேலும் அனுப்பப்படுகிற ஊழிய அறிக்கைகள், நன்றிக் கடிதங்கள், ஜெப விண்ணப்பப் பதில்கள் சரிவர கிடைக்கப் பெறவும் email, SMS, website மூலம் கொடுக்கப்படும் செய்திகள் சரிவர கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். கடிதப் பரிமாற்றங்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற ஜெபியுங்கள்.

❖ **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus (MBA II Year) Brighton Shalom (B.Tech Media Final Year) Joy Shekinah (Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.

❖ நம் ஊழியத்திற்கு மிக மிக அவசர தேவையான, ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய 1000 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்பப் பாரத்துடன் ஜெபியுங்கள்.

❖ நமது பீல் சுதேச ஊழியர் குடும்பம் மற்றும் ஹாஸ்டல் பிள்ளைகளுக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்க ரூ. 8 லட்சம் தேவையுள்ளது. இந்தத் தேவை கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

❖ கிறிஸ்மஸ் காலங்களில் நமது பணித்தளங்களில் நடைபெறும் கிறிஸ்மஸ் கீத பவனிகள் சிறப்பாக நடைபெறவும், கர்த்தர் நல்ல பாதுகாப்பைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

# சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் ஷாலோம் பணித்தள வருகை

(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

பாரேவா, குஜராத்

## இயேசு விடுவிக்கிறார் மூலமாக கட்டப்பட்டுள்ள 100 வது கிராம ஆலய பிரதிஷ்டை, பாரேவா, குஜராத்



கலாச்சார வரவேற்பு



சபை விசுவாசிகளுடன்



ஆலய பிரதிஷ்டை



ஆலய மணி பிரதிஷ்டை



பாடல் & ஆராதனை வேளை



செய்தி வேளை



கூடியிருந்த பாரேவா சபை விசுவாசிகள்



சபை போதகர் ஹவுசிங் சங்காடா அவர்கள் குடும்பத்துடன்

# சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் ஷாலோம் பணித்தள வருகை
(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

## குஜராத் கங்கேலா கிராம ஆலய கூடுகை





கலாச்சார வரவேற்பு



சபை மூப்பர் நகின் பாய் அவர்களுடன்



சபை போதகர் Rev. ரத்தன்சிங் மாவியுடன்





கூடியிருந்த சபை விசுவாசிகள்



விசுவாசிகளுக்காக ஜெபம்



ஆலய முழு தோற்றம்


ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் 2010
தேவனால் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள்

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் 2010




உன்னத அபிஷேக ஜெபவேளை







கர்த்தருடைய திருவிருந்து ஆராதனை



நமது ஷாலோம் பிரதிநிதி சகோ. ஜார்ஜ் அவர்களின் பகிர்வு நேரம்
கூட்ட ஒருங்கிணைப்பாளர் சகோ. ஜெயராஜ்




சகோ. டைட்டஸ் அவர்களின் சாட்சி நேரம்

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் 2010






பணித்தள அலுவலக ஊழியர்களின் சிறப்பு பாடல்கள்




சகோதரி வஹிதா தேவதாஸ் & சகோ. ஃப்ரங்க்ளின் – சிறப்பு பாடல்



அலுவலக ஊழியர்களின் நடன நிகழ்ச்சி





வேத வசன போட்டிக்கான சிறப்பு பரிசுகள்



சுவையான உணவு வழங்கப்படுகிறது



செய்தி வேளையின்போது

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் 2010




பீல் ஆதிவாசி கலாச்சார நடன வரவேற்பு




பிஷப் கோல் ஜெபித்து, பிஷப் தேவதாஸ் அவர்களிடம் வழங்கப்படுகிறது




தேவதாசர்களுக்கு உற்சாக கலாச்சார வரவேற்பு




77 ஷாலோம் போதகர்களுக்கான சிறப்பு ஜெபம்




மகிமையான பாடல் மற்றும் ஆராதனை வேளை




ஷாலோம் ஊழிய சிறப்பு பங்காளர் கேடயம் மற்றும் நினைவுப் பரிசு வழங்குதல்




நடனத்துடன் தேவனை பாடி, துதித்து மகிமைப்படுத்துதல்



சகோ. டைட்டஸ் அவர்கள் ஊழியத்திற்காக
பிரதிஷ்டை செய்யப்படுகிறார்கள்



சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கு
சிறப்பு ஜெபம்

# சுதேச ஊழியர் பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சிகள்



மலர் கொத்து கொடுத்து வரவேற்பு





வாழ்த்து அட்டைகள் கொடுத்து வரவேற்பு



வேதாகமங்களைப் பெற்ற மகிழ்ச்சியில் நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள்

# சுதேச ஊழியர் பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சி



வரவேற்பு



ஆராதனை வேளை




மாணவியரின் நடனம்



குட்டீஸ் நடன வேளை



இயேசுவே இரட்சகர் – நாடகம்




23வது சங்கீதத்தை ஆங்கிலத்தில் ஒப்பிக்கும் சிறுவன் சாம்



செய்திவேளை



உணவு பரிமாறுகிறார் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்

# சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் ஷாலோம் பணித்தள வருகை
(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

## அந்தர்வேலியா கிராம ஆலய கூடுகை


கலாச்சார வரவேற்பு


பாடல் & ஆராதனை வேளை


Compassion Project சிறுவர்களுடன்


செய்தி வேளை


பஞ்சாயத்துத் தலைவரும் நமது விசுவாசியுமான சகோ. தந்ஜி புரியாவுடன்


சபை போதகர் புர்சன்புரியா குடும்பத்துடன்


ஆலயத்தின் முழுத் தோற்றம்


கூடியிருந்த சபை விசுவாசிகள்

# சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் ஷாலோம் பணித்தள வருகை

(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)





ஷாலோம் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 200 சைக்கிள்களில் ஒரு பகுதி (40 சைக்கிள்கள்)





சுதேச ஊழியர் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட 1000 வேதாகமங்கள்





பழைய **BOLERO** ஜீப்பிற்குப் பதிலாக இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாக பணித்தள ஊழியங்களை நிறைவேற்ற புதிதாக வாங்கப்பட்டுள்ள **XYLO** வாகனம்



ரூ. 2 லட்சம் மதிப்பில் 500 சுதேச ஊழியர் குடும்பங்களுக்கு Bag மற்றும் Scarf வழங்கப்பட்டது

# சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் ஷாலோம் பணித்தள வருகை

(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

## ஷாரோன் நினைவு மருத்துவமனை (ஜாலோத், குஜராத்) பார்வையிடல்



நமது மருத்துவமனையின் வெளித் தோற்றம்



Dr. Shaju அவர்களுடன்



மருத்துவமனைக்காக சிறப்பு ஜெபம்



மருத்துவமனை ஊழியர்களுடன்





ஷாலோம் பிஷப் அலுவலகத்திற்காக சிறப்பு ஜெபம், தாகோத், குஜராத்





குஜராத் தாகோத், பணித்தள அலுவலக ஊழியர் கூடுகையில்...




தேவ கிருபையாலும், அநேக தேவ பிள்ளைகளின் ஜெபங்களினாலும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, நம் ஷாலோம் சுதேச ஊழியர்களுக்கான குடும்ப முகாம் 2010 குஜராத் மாநிலம் ஆனந்த் பட்டணத்திலுள்ள பெராக்கா மையத்தில் நவம்பர் 8,9,10 ஆகிய தேதிகளில் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. அதற்காக ஷாலோம் ஊழியர்கள் வெகுநாட்கள் உபவாச ஜெபம், சங்கிலி ஜெபம், வட்டாரங்களில் இணைந்த ஜெபம் என்று ஜெப ஆயத்தங்கள் முதலாவது நடைபெற்றது. கூடுகையில் 915 பேர்கள் கலந்துகொண்டார்கள்.

நவம்பர் 7ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் அதிக உற்சாகத்துடன், ஆவலோடு கூட சுமார் 800 பேர்கள் கூடிவந்தார்கள். முதலாவது இரவு 8 மணி அளவில் ஆயத்த ஜெப கூடுகை நடைபெற்றது. Bishop.V. தேவதாஸ் அவர்கள் ஆரம்ப வார்த்தைகள் தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுத்துரைத்து, ஆரம்ப ஜெபம் நடத்தினார்கள். அதை தொடர்ந்து சகோதரி வஹிதா தேவதாஸ் மற்றும் சகோ. ஃப்ராங்க்ளின் பென்னட் சிறப்பு பாடல்களை பாடி ஆராதனை நடத்தினார்கள். ஆராதனை வேளையில் தேவ பிரசன்னம் இறங்கி வந்தது. அநேகர் அபிஷேகத்தை பெற்றார்கள். அநேகர் தங்களுக்குள் இருந்த அபிஷேகத்தில் புதுப்பிக்கபட்டார்கள். Pas. பாதர் டோடியார் (Raj), Pas. மத்தூர் புரியா (MP), Pas. சுரேஷ் ஹட்டிலா (Guj) ஆகியோர் மூலமாக முகாம் ஆசிர்வாதங்களுக்கான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. அனைவரும் தேவனிடத்தில் மன்றாடி ஜெபித்தார்கள்.

நவம்பர் 8ம் தேதி திங்கட்கிழமை மும்பை பட்டணத்திலிருந்து Pas. டேனியல் அவர்கள் குழுவாக முகாமிற்கு வந்து 3 நாட்களும் பாடல் மற்றும் துதி ஆராதனைகளை நடத்தி தந்தார்கள். துதித்து பாடல்களை பாடும்போது அனைவரும் தேவ பிரசன்னத்தில் மகிழ்ந்தார்கள். தேவ பிரசன்னத்தில் மகிழ்ந்து கொண்டு நடனமாடி துதித்தார்கள். பரலோக மகிமை இறங்கி வந்தது. அதேபோல ஆராதனை வேளையில் தேவபிரசன்னத்தில் ஒவ்வொருவரும் நிரம்பியவர்களாய் தங்களை அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

8ம் தேதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு காலை துதிபாடல் ஆராதனையுடன் முகாம் ஆரம்பிக்கப்பட்டது. கோவை பட்டணத்திலிருந்து IPC சபை தலைமை போதகர் அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். இங்கே ஏறிவா (வெளி 4.1) என்ற தலைப்பில் ஊழியப்பாதையில் மேலே ஏறி வருவதற்கு காணப்படும் 8 கதவுகளை பூட்டவேண்டும் என்பதை தெளிவாக ஆவிக்குரிய ஆழமான சத்தியங்கள் மூலமாக எடுத்துரைத்தார்கள். அனைத்து ஊழியர்களின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தங்கள் நிலைமைகளை உணர்ந்து ஆவியானவருக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். தேவ திட்டத்தையும், சித்தத்தையும் அறிந்து கொள்ள இது ஒரு நல்ல தருணமாக அமைந்தது.

அதை தொடர்ந்து Bishop V. தேவதாஸ் அவர்கள் முழு பீல் மக்களின் இரட்சிப்பின் திட்டத்திற்கு வருங்கால தலைவர்களாக எழும்பி பிரகாசிக்கவேண்டும் என யோசுவா, தாவீதை தொடர்ந்து சாலமோன், எலியாவை தொடர்ந்து எலிசா, பவுலை தொடர்ந்து தீமோத்தேயு என்று இப்படியாக தேவனுடைய பெரிய காரியங்களை சாதித்தார்கள் என்பதை வசனத்தின் மூலமாக

எடுத்துரைத்தபோது தங்களுக்கு கொடுக்கப்பட்ட தரிசனத்தை ஏற்றுக்கொண்டவர்களாக தங்களை முற்றிலுமாக அர்ப்பணித்தார்கள்.

8ம் தேதி மதிய உணவிற்கு பின்பு சிறப்பு பாடல்கள் பாடி **Pas. டேனியல்** குழுவினர் உற்சாகப்படுத்தினார்கள். இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திலிருந்து சகோ. ராபர்ட் அவர்கள் *"நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களை தெரிந்து கொண்டேன்"* என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள்.

அன்று மாலை **சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார்)** அவர்களுக்கு சிறப்பான உற்சாகமான கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது. அவர்களுடன் **போதகர் டேவிட் பிரகாசம்,** போதகர் டேனியல் (மும்பை) **சகோ. ஜார்ஜ்** அவர்கள் (பாகோடு). **சகோ.டைட்டஸ் தேவதாஸ்** மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் யாவருக்கும் பாகுடி (தலைப்பாகை) மற்றும் சால்வை, மாலைகளை அணிவித்து கனப்படுத்தினார்கள். குஜராத் சுதேச ஊழியர்கள் காலச்சார நடனமாடி வரவேற்பு கொடுத்தார்கள். தாகோத் பணித்தள் அலுவலக ஊழியக்காரிகள் சிறப்பு பாடல் மற்றும் Shalom Training Unit சிறப்பு பாடல் போன்ற சிறப்பு நிகழச்சிகள் நடைப்பெற்றது.

அதை தொடர்ந்து சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த வழிநடத்துதலின்படி "தேவன் தரும் தரிசனம்" என்ற தலைப்பில் தரிசனம் இல்லாத ஊழியம் பயனற்றது என்பதையும், ஷாலோம் ஊழிய பரம தரிசனத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். குறிப்பாக சுமார் 1 கோடி பீல் மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் 7000 கிராமங்களில் சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது தேவன் தந்த தரிசனம் என்பதை உறுதியாக பிடித்துக்கொண்டு ஊழியத்தை நிறைவேற்றவேண்டும் என அழைப்பு தந்தார்கள். ஜெப வேளையில் அநேகர் பரிசுத்த ஆவியினால் தொடப்பட்டு தங்கள் சபைக்கு, ஊழியத்திற்கு புதிய தரிசனங்களையும் தேவன் ஏற்கனவே தந்த ஊழிய தரிசனங்களை புதுப்பித்துக் கொண்டார்கள். தேவன் தன் அநாதி தீர்மானங்களை பீல் மக்கள் மத்தியில் நிறைவேற்ற மிக நெருக்கமாக ஊழியர்கள் குடும்பங்களுடன் உரையாடியதுடன் முடிந்தது.

9–11–10 செவ்வாய்கிழமை அன்று காலை பாடல் துதி ஆராதனையில் மிக அதிகமாக தேவ மகிமை இறங்கி வந்ததை உணர்ந்தோம். சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் காலையில் முதல் செய்தி வேளையில் பீல் மக்கள் தரிசனம் பெற்றுக்கொண்ட நாம் அடுத்தபடியாக என்ன செய்யவேண்டும் என்பவதை ஆவியானவரின் நிறைவுடன் எடுத்துரைத்தார்கள். முக்கியமாக தேவன் தந்த தரிசனம் நிறைவேற்றப்பட முதலாவது போராடி ஜெபிக்க வேண்டும். பெற்றுக்கொள்ளத்தக்கதாக, பெற்றுக் கொள்ளும் வரை தடைகள் உடைக்கப்பட, ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட எப்படி போராடி ஜெபிக்கவேண்டும் என்பதை எடுத்துரைத்தார்கள். சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் ஆவியானவரின் வழிநடத்துதலின் படி 3 மாநிலங்களில் வாழும் 1 கோடி பீல் மக்கள் இரட்சிப்புக்காக ஜெபத்தில் வழிநடத்தினார்கள். குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநில ஊழிய ஒருங்கிணைப்பாளர்கள் Pas. பால் முனியா Pas. சுரேஷ் ஹட்டிலா Pas. பாதர்பாரியா மூன்று மாநிலங்களுக்காக திறப்பில் நின்று அனைத்து ஊழியர்களுடன் இணைந்து ஜெபித்தார்கள்.

அதை தொடர்ந்து தேவன் தந்த பரமதரிசனம் நிறைவேற்றப்பட அனைவரும் இணைந்து ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவர் அபரிவிதமாக இறங்கி வந்தார். ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளுடன் இணைந்து ஜெபிக்க உதவிச் செய்தார். அதன்படி இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் மூலமாக அனைத்து சுதேச ஊழியர்கள், ஊழியக்காரிகளுக்கும் அழகான Bags மற்றும் Scarf ரூ. 2 இலட்சங்கள் மதிப்பில் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து

போதகர் டேவிட் பிரகாசம் அவர்கள் திறக்கப்படவேண்டிய கதவுகள் 7 பற்றி மேலேறிச் செல்லும் அனுபவத்தை குறிப்பாக திருச்சபை வானத்தின் வாசல் பெத்தேல் (ஆதி 28 : 17–19) என்பதைக் குறித்து 7 காரியங்களை எடுத்துரைத்தது அனைத்து சபை போதகர்களையும் உயிர்ப்பித்தது. சபை வளர்ச்சி குறித்து ஆழமான தரிசனத்தையும், ஆத்துமபாரத்தையும் அனைவரும் பெற்று மிகப் பெரிய எழுப்புதலை உணர முடிந்தது.

மதிய வேளையில் India Campus Crusade மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட Heart Beat இன்னிசை பாடல் நிகழ்ச்சியின் மூலமாக அனைத்து ஊழியர்களும் உற்சாகமடைந்தார்கள். அதை தொடர்ந்து சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் இலக்கை அடைந்த தாவீது என்ற தலைப்பில் சிறப்பு செய்தி வழங்கினார்கள். அனைத்து ஊழியர்களும் விசேஷித்த அபிஷேகத்தை பெற்றார்கள்.

அன்று மாலை ஊழியர்களுடைய சிறப்பு பாடல்கள் நடனம் குறிப்பாக மத்தியபிரதேசம், இராஜஸ்தான் பீல் ஆதிவாசி கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சகோதரி வஹிதா தேவதாஸ் மற்றும் சகோ. பிராங்க்ளின் தேவன் தந்த ஹிந்தி பாடலை தேவ நாம மகிமைக்காக பாடினார்கள். மேலும் ஷாலோம் பயிற்சி கூட ஊழியர்கள் சிறப்பு பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். Pas. டேனியல் சிறப்பு பாடல்களை பாட ஊழியர்கள் அனைவரும் ஆவியில் நிறைந்து நடனமாடின காட்சி மறக்க முடியாததாகும்.

மாலை சந்தியா வேளையில் போதகர் டேவிட் பிரகாசம் அவர்களுக்கு நினைவு பரிசு ஊழியத்தின் சார்பில் வழங்கப்பட்டது. அவர்கள் மாலை சிறப்பு செய்தி வழங்கினார்கள். தாவீதுக்கு தேவன் கொடுத்த பராக்கிரம சாலிகள் எப்படிப்பட்டவர்கள்? தேவனுக்கென்று பராக்கிரமமான காரியங்களை செய்ய அழைக்கப்பட்டவர்கள் நாம் என்று அனுகூலமாக செய்தியை கொடுத்தார்கள். அதை தொடர்ந்து உன்னதமான அபிஷேக நேரத்தை சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் நடத்தினார்கள். சுமார் 1000 ஊழியர்கள், ஊழியக்காரிகள் கூடியிருந்த அந்த ஜெப வேளையில் ஆவியானவர் சகோதரர் மூலமாக தேவன் உங்களில் சிலரை வித்தியாசமான ஊழியத்திற்கு அதாவது நற்செய்தி அறிவித்து விடுதலை தரும் ஊழியத்திற்கு பயன்படுத்த விரும்புகிறார். *இயேசு கிறிஸ்து நம் நடுவில் வந்துள்ளார். அவரே உங்கள் கரத்தை பிடித்து முன்னாக கொண்டு வருவார்* என்று ஆவியானவர் அவர்கள் மூலமாக திருவுளம் பற்றினபோது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சுமார் 50 பேர்கள் முன்னாக பின்னாக ஆடி ஆடி வந்து கீழே விழுந்து அபிஷேகத்தில் நிறைந்த காட்சி மெய்யாகவே தேவனுடைய வல்லமையின் பிரசன்னத்தை காண வைத்தது. அவர்கள் யாவரும் தங்களுக்கு கிடைத்த விஷேசித்த அபிஷேகத்தை தரிசனத்தை பகிர்ந்து கொண்டார்கள்.

மேலும் அத்தனை பேர்களுக்கும் சகோ. மோகன் சி லாசரஸ் அவர்களும் போதகர் டேவிட் பிரகாசம் அவர்களும் அபிஷேக ஆராதனை நடத்தி ஜெபித்தபோது மாபெரிய அபிஷேக தரிசனமும், விடுதலையும் உண்டானது. பந்தல் மண்டபம் முழுமையும் தேவனுடைய ஷெக்கினா மகிமை நிரம்பி வழிந்ததை கண்டு தேவனை துதித்தோம்.

கடைசி நாள் 10–11–10 புதன்கிழமை பிரதான நாளென்று காலை 9 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. Shalom Diocese in India ஆரம்பிக்கப்பட்டு 1 வருடம் நிறைவை கண்டுள்ளது. ஆகவே போதகர் பிரதிஷ்டை செய்யப்பட்ட 77 போதகர்களும் Bishop V. தேவதாஸ் அவர்களும் சகோ. மோகன் சி லாசரஸ் அவர்களும் தேவனை துதித்து பவனியாக மேடையில் வந்து நின்று ஆராதித்தார்கள். சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் Shalom Diocese in India க்காக துதி

செலுத்தி ஜெபித்து 3 மாநிலங்களில் விரைவில் Diocese க்கள், திருமண்டலங்கள் உருவாகவும், Shalom Diocese தேசத்திற்கும் பீல் மக்களுக்கும் ஆசீர்வாதமாக அமைய ஜெபித்தார்கள்.

அதை தொடர்ந்து திருமண்டலத்திற்காக Shalom Board Members சார்பில் வாங்கப்பட்ட வெள்ளியினால் செய்யப்பட்ட பிஷப் கோலை சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் ஜெபித்து Bishop V. தேவதாஸ் அவர்கள் கைகளில் வழங்கினார்கள்.

மேலும் Bishop V. தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவரின் தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியத்திற்கும், ஊழிய தரிசனத்திற்கும் தேவன் தந்த அதிகாரத்தையும் அழைப்பையும் உறுதிப்படுத்தியது.

மேலும் சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் திருமண்டலமாக தேவன் நடத்தி சென்ற 20 வருட பாதையை நினைவு கூர்ந்தார்கள். சபைகள், போதகர்கள், ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகள் மற்றும் உடன் ஊழியர்கள் தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு தந்த பரம தரிசனமாக பீல் மக்கள் இரட்சிப்பின் பணியான ஷாலோம் ஊழியத்துடன் எப்படி இணைந்து செயல்படவேண்டும். அப்பொழுது கிடைக்கும் ஆசீர்வாதங்ளை பகிர்ந்து கொண்டதுமன்றி ஊழியர்களுக்கு, ஊழியத்தின் தலைவர்களுக்கு விரோதமாக எழும்பும் பேச்சுகள், செயல்படும் காரியங்களின் நிமித்தமாக வரும் சாபங்கள், ஆசிர்வாத குறைகள் எச்சரிக்கையாக ஆவியானவரின் ஏவுதலால் எடுத்துரைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து அன்பு மகன் D. Gladson Titus (MBA) முகாமில் கலந்து கொண்டது மிக ஆசீர்வாதமாக, அற்புதமாக இருந்தது. டைட்டஸ் தன் சாட்சியை பகிர்ந்து கொண்டு பீல் சுதேச ஊழியர்கள் அனைவரும் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்கிறபடியால் தேவனால் பயன்படுத்த பட வேண்டும் என்று உற்சாகப்படுத்தி தனக்கு தேவன் தந்த பீல் மக்கள் ஊழிய பாரத்தையும் தரிசனத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பின்பு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் படி சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் சகோ. Titus அவர்களை அர்பணித்து ஊழியத்திற்காக பிரதிஷ்டை செய்தார்கள். அனைத்து பீல் சுதேச ஊழியர்கள் குடும்பங்களும் இணைந்து ஷாலோம் ஊழியத்திற்காக அடுத்த தலைமுறை யோசுவாவை தேவன் உருவாக்கி தருகிறபடியால் தேவனை துதித்து மகிமைபடுத்தினார்கள். நீங்களும் எங்களுடைய மூத்த மகன் டைட்டஸ் தேவசித்தத்தின் படி தேவனுடைய ஊழியங்களை ஏற்ற வேளையில் ஊழியங்களை பொறுப்பேற்று நிறைவேற்ற ஜெபியுங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சகோ. ஜார்ஜ் (பாகோடு) அவர்கள் முகாமிற்கும் பணித்தள ஊழியத்திற்கும் வந்திருந்தார்கள். அது மிகுந்த மகிழ்ச்சியை தந்தது. ஊழிய ஆரம்ப நாட்களிலிருந்து ஷாலோம் ஊழியங்களையும் எங்கள் குடும்பத்தையும் பீல் மக்களையும் நேசித்து ஜெபித்து ஊழியங்களை தாங்கி வருகிறார்கள். நம் ஊழியத்தின் செயற்குழு அங்கத்தினராக ஆகவும் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் சிறப்பு வாழ்த்துரையும், தேவ ஊழியர்களுக்கு ஆலோசனைகளை தந்து ஜெபித்தார்கள்.

நம் சுதேச ஊழியர்கள் மனைவிமார்களில் பெரும்பாலோர் பள்ளிக்கூடமே தங்கள் வாழ்க்கையில் காணாதவர்கள். பலர் மிகவும் குறைவாக படித்தவர்கள். ஆனால் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் முயற்சியில் கர்த்தருக்கள் பெலன் கொண்டு, அபிஷேகம் பெற்று எழுத படிக்க கற்றுக் கொண்டார்கள். ஒவ்வொரு வருடமும் வேதாகமத்தில் சில பகுதிகளை மனப்பாடமாக ஒப்பிப்பார்கள். அதுபோல் வேதத்தில் இவ்வருடம் இயேசுவின் உபதேசங்கள் அனைத்தையும் மனப்பாடமாக சொல்லிய ஊழிய காரிகளுக்கு சிறப்பு பரிசுகளை சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் வழங்கி உற்சாகப்படுத்தினார்கள்.

தேவனுடைய செய்திக்கு முன்பாக அனைவரும் தேவனை மறுபடியும் துதித்து பாடி தேவ பிரசன்னத்தில் அமர்ந்தார்கள். முகாமின் இறுதி செய்தியை சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் கொடுத்தார்கள். தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட தரிசனத்திற்காக, போராடி ஜெபிப்பது மட்டுமல்ல, ஆத்துமாக்களுக்காக மன்றாடி ஜெபிப்பதை வேத வசனத்தின் ஆதாரத்துடன் பேசும் போதே ஆவியானவர் இறங்கி வந்தார். கெத்சமனே தோட்டத்தில் மன்றாடி ஜெபித்த இயேசுவைப் போல் ஆத்தும பாரத்துடன் எங்கள் சொந்த பீல் ஜனங்கள் எங்கள் தலைமுறையில் இரட்சிக்கப்பட வேண்டும் என்று கதறி அனைத்து போதகர்களும், மனைவிமார்களும் புது அர்ப்பணிப்புக்காக தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

20 வருடங்கள் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்கள் ஷாலோம் ஊழியத்தில் பங்காளராக இணைந்து கிறிஸ்துவின் அன்பினால் பிணைக்கப்பட்டு மாபெரும் பீல் ஆதிவாசி மக்கள் ஆத்தும அறுவடையில் பங்கு பெற்று வருவது கிறிஸ்துவுக்கே மகிமை. ஷாலோம் ஊழியத்தின் சார்பில் ஒரு நினைவு கேடயம் ஒன்று சகோ மோகன் சி. லாரசஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஷாலோம் ஊழியர்கள் குடும்பமாக சகோ மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காகவும், இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும், தாங்கி ஜெபித்து வரும் இயேசு விடுவிக்கிறார் பங்காளருக்காவும் விஷேசித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் புதுபெலனையும், அபிஷேகத்தையும், வார்த்தைகளையும் கட்டளையிட்டார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியபடி வரும் 5 வருடங்களில் 10 இலட்ச ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கான திட்டங்களை செயல்படுத்த இயேசு விடுவிக்கிறார் ஊழியமும் ஷாலோம் ஊழியமும் இணைந்து அர்ப்பணித்துள்ளோம். தொடர்ந்து ஜெபிக்க தங்களை அன்புடன் அழைக்கிறோம். அல்லேலூயா.

## பாரேவா கிராம ஆலயம்

தேவ கிருபையால் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்கள் மூலமாக கட்டப்பட்ட 100 வது கிராம ஆலயமான பாரேவா கிராம ஆலயம் 11.11.2010 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. மகா பெரிய சந்தோஷம் பாரேவா கிராமத்தில் உண்டாயிற்று. தேவனுடைய செய்தி கொடுக்கும்போது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அநேகர் விடுதலை பெற்றார்கள். போதகர் ஹவ்சிங் சங்காடா குடும்பமாக சிறப்பாக பணி ஆற்றி வருகிறார். 70 குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## ஷாரோன் மருத்துவமனை பார்வையிடல்

ஜாலோத் நகரில் நம் முதல் பணித்தள அலுவலகத்தில் கடந்த 6 மாதங்களாக மருத்துவ பணி நடைபெற்று வருகிறது. Dr. Sheju அவர்கள் மருத்துவ பணியை நிறைவேற்றி வருகிறார்கள். சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் பார்வையிட்டு மருத்துவமனை ஆசீர்வாதத்திற்காகவும், Dr. Sheju அவர்களுக்காகவும் ஜெபித்து ஆசீர்வதித்தார்கள்.

## ஷாலோம் சுதேச ஊழியர்கள் பிள்ளைகளுக்கான சிறப்பு கூடுகை

தேவன் நம் சுதேச ஊழியர்கள் அனைவனருக்கும் சுமார் 1400 பிள்ளைகளை தந்துள்ளார். அவர்களில் 6வது வகுப்பிலிருந்து கல்லூரி வரை படிக்கும் மாணவ, மாணவியர் 450 பேர்களுக்கு 11.11.10 வியாழன் அன்று இரவு 7 மணிக்கு சிறப்பு கூடுகை ஒழுங்கு செய்யப்பட்டது. மிகுந்த சந்தோஷத்துடன் சகோ. மோகன் சி லாசரஸ் அவர்களை WELCOME UNCLE என்று வரவேற்றார்கள். பூக்கொத்துக்களையும், அனைத்து மாணவர்கள் கையெழுத்திட்ட சிறப்பு வாழ்த்து அட்டையும் வழங்கினார்கள்.

மேலும் அனைத்து பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சிகள் பாடல்கள், நடனம், நாடகம், வேத வசனங்கள் கூறுதல் போன்ற நிகழ்ச்சிகள் இரவு 11.30 வரை நடைபெற்றது. சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் இறுதி வரை நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தார்கள். சுதேச ஊழியர்கள் பிள்ளைகள் இவ்வருடம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் தரப்பட்ட 5000 வேதாகமங்கள் 1000 பேர்களுக்கு, 1000 வேதாகமங்கள் முதல் 450 வேதாகமங்கள் மற்றும் அழகிய பேனா மற்றும் இனிய சாக்லேட்டுகளை சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் தங்கள் கரங்களினால் பங்கு பெற்ற அனைத்து பிள்ளைகளுக்கு வழங்கி ஆசீர்வதித்தார்கள். குறிப்பாக +2, கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்காக சிறப்பு ஜெபம் பண்ணினார்கள். இறுதியில் அனைவருக்கும் சிறப்பு விருந்து ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் உடன் இருந்து உணவுகளை சிறுவர்களுக்கு பரிமாறினார்கள். எல்லா பிள்ளைகளும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் கிராமங்களுக்கு அடுத்த நாள் அதிகாலையில் புறப்பட்டு சென்றார்கள். இந்த சிறியரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்ற சொன்ன இயேசுவுக்காக செய்துள்ளோம் என்ற சந்தோஷத்துடன் அந்த நாளை முடித்தோம்.

<u>**சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள்**</u>

2010ம் வருடம் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் மூலமாக 5000 வேத புத்தகங்கள் மட்டுமல்லாமல் 200 சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டது. அதில் 40 சைக்கிள்கள் 12.11.2010 அன்று சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் கரங்களால் வழங்கப்பட்டது. 7 லிருந்து 10 கி.மீ வரை நடந்து செல்லும் சுதேச ஊழியர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் சுவிஷேச பணியை நிறைவேற்ற உற்சாகத்துடன் கிராமங்களுக்கு சைக்கிளில் தேவனை துதித்து நன்றி கூறி கடந்து சென்றார்கள்.

<u>**தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள் குடும்பங்களுக்கான சிறப்பு கூடுகை**</u>

காலை 10 மணி அளவில் தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள் குடும்பங்களுக்கான சிறப்பு கூடுகையில் சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். ஒவ்வொருவருக்கும் தனியாக ஜெபித்தார்கள். பரிசுத்த ஆவியானவர் மிக தெளிவாக தீர்க்கதரிசன வார்த்தைகளை தந்து ஊழியர்களை பரிசுத்தத்திற்கும், ஒருமனதோடும் உண்மையாய் ஊழியம் செய்யவும் அர்ப்பணிக்க கிருபை தந்தார். மேலும் பணித்தள அலுவலகம், Training Unit, Project மறறும் அனைத்து Department செயல்பாடுகளை பார்வையிட்டு சந்தோஷப்பட்டார்கள்.

<u>**குஜராத், கங்கேலா திருச்சபை பார்வை**</u>

கங்கேலா திருச்சபையாரை காணும்படியாக 12.11.2010 அன்று காலை 11 மணி அளவில் சென்றோம். ஷாலோம் திருச்சபையில் பெரிய சபையாக விளங்கும் இந்த சபையில் நகின்பாய் என்பவர் சிறந்த மூப்பராக விளங்குகிறார். அவர் மூலமாக சுமார் 200 குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு உள்ளார்கள். அவருடைய நிலத்தில் கட்டப்பட்ட ஆலயம் இயேசு விடுவிக்கிறார் மூலம் வழங்கப்பட்ட ரூ. 2 இலட்சம் நிதி உதவியுடன் கட்டப்பட்டதாகும். சுமார் 500 பேர்கள் கூடி ஆராதித்தார்கள். திருமண வைபத்தைப் போல் உற்சாகமான வரவேற்பு மறக்கமுடியாதது. சால்வைகள், தலைப்பாகைகள் மற்றும் அதிகமான மலர் மாலைகளை போட்டு வரவேற்றார்கள். விசுவாசிகள் அனைவரும் சகோ மோகன் சி. லாரசஸ் அவர்களை கண்டு ஆனந்த பரவசமடைந்தார்கள். ஒரு மூப்பர் தன் கையிலிருந்து தங்க மோதிரத்தை அணிவித்தார். அனைத்து விசுவாசிகளும் உற்சாகமான காணிக்கையை இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக கொடுத்தார்கள். ஷாலோம் விசுவாசிகள், இயேசு விடுவிக்கிறார் ஊழியர்

சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் மூலமாக பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய நன்மைகளுக்கு தேவனை துதிக்கிறோம் என்று சாட்சி சொன்னார்கள். தேவ செய்தியின் போது பரிசுத்த ஆவியானவர் பலத்த கிரியைகளை நடப்பித்தார். சபை போதகர் ரத்தன்மாவி குடும்பம் மற்றும் மூப்பர்கள் கூட்டங்களை நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

## மத்தியபிரதேசம் அந்தர்வேலியா

அதன்பின்பு மத்தியபிரதேசம் அந்தர்வேலியா கிராமத்திற்கு மதியம் 2 மணிக்கு கடந்து சென்றோம். விசுவாசிகள் ஆலயத்தில் நிரம்பி வழிந்து ஆராதித்து கொண்டிருந்தார்கள். எத்தனையோ எதிர்ப்புகள், கஷ்டங்கள் (நம் Armada Jeep, Motor Cycle மற்றும் வீடுகள் உடைக்கப்பட்ட நாட்கள்) நினைக்கும் போது தேவன் அனைத்தையும் மாற்றி எழுப்புதலை இந்நாட்களில் தந்துள்ளார். இங்குள்ள சர்ப்பஞ்ச் (ஊர்த்தலைவர்) தன்ஜிபாய் நம் சபை மூப்பராவார். அவரும் அனைத்து விசுவாசிகளும் சகோ மோகன் சி. லாசரஸ் அவர்களை உற்சாகமாக வரவேற்றார்கள். செய்தி வேளையில் பலர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். இயேசுவின் நாமத்தில் சுகம் பெற்றார்கள். ஆத்தும பாரமும் தரிசனமும் பெற்றார்கள். போதகர். பூர்சன்பாய் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள். Compassion மூலமாக நடைபெறும் project ல் உள்ள 150 சிறுவர்களை சகோ மோகன் சி. லாரசஸ் அவர்கள் சந்தித்து ஆசீர்வதித்தார்கள்.

இறுதியாக தாகோத் பணித்தளம் வந்து மிஷனெரி இல்லத்தை ஆசீர்வதித்து ஜெபித்து புதிதாக கட்டப்பட்ட பிஷப் அலுவலக அறையையும் பிரதிஷ்டை செய்து பிஷப் தேவதாஸ் குடும்பத்திற்காக விஷேசித்த ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

20 வருட ஷாலோம் ஊழியங்களையும், மிஷனெரி பிஷப் தேவதாஸ் அவர்களையும் கனப்படுத்தி, வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக , வேகமாக தேவ பணியை நிறைவேற்ற ரூ.9.5 இலட்ச மதிப்பில் Mahendra XYLO வாகனத்தை சகோ மோகன் சி. லாரசஸ் அவர்கள் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தில் சார்பில் ஷாலோம் ஊழியங்களுக்காக பிஷப் தேவதாஸ் அவர்கள் கரங்களில் ஜெபித்து வழங்கினார்கள். இது மிகவும் இன்பமான அதிர்ச்சியாக இருந்தது. கொஞ்சத்தில் உண்மையாய் ஊழியம் செய்யத எங்களை தேவன் நினைத்தபடியால் தேவனை துதிக்கிறோம்.

## முடிவுரை :

1990ம் வருடம் டிசம்பர் 28ம் தேதி திறப்பின் வாசல் ஜெபத்தில் நாங்கள் (பிஷப் தேவதாஸ் சகோதரி வஹிதா தேதாஸ்) எங்கள் பிள்ளைகள் டைட்டஸ் I Std மற்றும் ஷாலோம் (6 மாதம்) குடும்பமாக தேவன் எங்களுக்கு தந்த பீல் மக்கள் தரிசனத்தின்படி ஊழியத்திற்கு எங்களையும், ஷாலோம் ஊழியங்களையும் சகோ மோகன் சி. லாரசஸ் அவர்கள் பிரதிஷ்டை செய்து அனுப்பினார்கள். கையில் ஒரு முகவரி கூட கிடையாது. பேய் பங்களா என்று அழைக்கப்பட்ட வீட்டில் ஊழியங்களை ஆரம்பித்தோம். இயேசு விடுவிக்கிறார் மூலமாக 20 ஆண்டுகளாக ஊழியப்பாதையில் தாங்கப்பட்டு பீல் மக்கள் மத்தியில் தேவ ஊழியத்தை கட்ட தேவன் கிருபை செய்த படியால் தேவனை துதிக்கிறோம். இயேசு விடுவிக்கிறார் ஊழியர் சகோ மோகன் சி. லாரசஸ் அவர்களுக்கும், ஜெபித்து தாங்கும் அனைத்து தேவ பிள்ளைகளுக்கு நன்றி கூறுகிறோம். தொடர்ந்து பீல் மக்கள் அறுவடை பணியில் கடந்து முன்னேறிச் செல்வோம்.

***எல்லா புகழ், கனம், மகிமை தேவனுக்கே உண்டாவதாக! ஆமென்.***



# ஜேம்ஸ் பிரேசர்

***மிஷனெரி முன்னோடிகள்***

ஜேம்ஸ் பிரேசர் 1886 ஆம் ஆண்டு லண்டல் மாநகரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர். இவர் கிறிஸ்தவ நெறிகளில் வளர்க்கப்பட்டார். பள்ளிப்படிப்பில் சிறந்து விளங்கிய இவர், லண்டன் பல்கலைக்கழக மெட்ரிக்குலேஷன் தேர்வில் இங்கிலாந்து நாட்டின் சிறந்த மாணவர்களில் ஒருவராக தேர்ச்சி பெற்றார். லண்டனின் இம்பீரியல் கல்லூரியில் 11906 ஆம் ஆண்டு பொறியில் பட்டப்படிப்பில் சேர்ந்தார். தான் ஒரு தலைசிறந்த பொறியியல் வல்லுநராக ஆக வேண்டுமென்ற வாஞ்சையே அவரது உள்ளத்தில் நிறைந்து இருந்தது. எதிர்பார்த்தது போலவே தனிச்சிறப்பான வகையில் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றார். கல்லூரி நாட்களில் பக்திக்கடுத்த காரியங்களில் அதிக சிரத்தை எடுத்துக் காட்டியதோடு, ஓய்வுநாள் பள்ளி ஊழியத்திலும் ஈடுபட்டு வந்தார். இவரது தயார் பக்தியுள்ளவர் (ஆனி பிரேசர்) தனது பிள்ளைகளில் ஒருவராவது மிஷனெரியாக மாறவேண்டும் என்று ஊக்கமாக ஜெபித்து வந்தார். ஒரு நாள் ஜேம்ஸ் பிரேசர் வாசித்த புத்தகம் அவருடைய வாழ்க்கை பாதையை மாற்றியது. “அப்படிச் சொல்லாதீர்கள்” என்ற தலைப்பிட்ட அந்த சிறுபுத்தகம் சீனாவில் அருட் பணியாளராக ஊழியம் செய்த ஒருவரால், மிஷனெரி ஊழியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதப்பட்டு இருந்தது.

“இருபதாம் நூற்றாண்டு துவங்கிவிட்ட பின்னரும் இன்னும் உலகத்தில் பெரும்பாலானோர் இரட்சிப்பின் செய்தியைக் கேள்விப்பட, மிஷனெரிப்பணி என்பது போதகர்களும் சபைகளும் மட்டுமே கவனிக்க வேண்டிய காரியங்கள் என்று சொல்லாதீர்கள்” என்று அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். அதை வாசித்த உடன் சிந்திக்கத் தொடங்கினார். சீனாவில் வல்லமை ஊழியம் செய்த ஹட்சன் டெய்லரின் வாழ்க்கை வரலாறு அவர் உள்ளத்தை தொட்டது. 1906 ஆம் ஆண்டு ஒரு கிறிஸ்தவப் பயிற்சி முகாமில் சிடி.ஸ்டட்டைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். ஊழியத்திற்காக தேவன் தன்னை அழைக்கிறார் என்று உணர்ந்தார். ஒரு நாள் வீட்டின் மேலறையில் ஜெபிக்கும் போது சீனா நாட்டு மக்களைப் பற்றிய பாரம் அழுத்தவே, தன்னை அர்ப்பணித்தார். தன் தாயிடம் கூறினார், முழங்காற்படியிட்ட ஆனி பிரேசர் தனது நீண்ட கால ஜெபம் கேட்கப்பட்டதற்காக தேவனைத் துதித்தார்கள்.

சீனாவின் தென்மேற்குப் பகுதிக்கு தனது இருபத்திரண்டாவது வயதிலேயே ஊழியம் செய்யய இங்கிலாந்திலிருந்துச் சென்றபர் ஜேம்ஸ் பிரேசர். பர்மிய நாட்டு எல்லைக்கு அருகேயிருந்த டெங்குவே என்ற சிறிய பட்டணத்தில் அவரது ஊழியப் பயணம் ஆரம்பமானது. இங்கு சீன மொழியைக் கற்றார். இந்த பகுதியில் சீனர்கள் மட்டுமின்றி ஹான், கக்கின், லிசு போன்ற பழங்குடி இனத்தவர்களும் வாழ்ந்தனர். டெங்குவே வந்த நான்கு நபர்கள், தங்கள்

மலைப் பகுதியில் ஊழியம் செய்ய அழைத்தனர். பிரசங்கம் செய்யும் அளவிற்கு தேர்ச்சி பெற்ற நிலையில், லிசு இனத்தவரை நோக்கிப் பயணம் செய்தார். ஜேம்ஸ் பிரேசர் தனது டைரியில் "வாய்ப்பு வரட்டும் என்ற காத்திருப்பது சாத்தானின் சோதனைகளில் ஒன்று என்றும், ஊழியத்துக்கான வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கும்படி வேதாகம் நமக்கு ஒரு போதும் போதிப்பது இல்லை, கைக்குக் கிட்டும் காரியங்களில் ஊழியம் செய்யும்படியே கட்டளையிடுகிறது" என்று எழுதி வைத்து இருந்தார்.

லிசு பழங்குடியினர் மலைச்சரிவுகளில் வசித்து வந்தனர். இலட்சத்திற்கும் அதிகமான பேர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நற்செய்தியை கேட்டதே இல்லை. சீனர்கள் இவர்களை குரங்கு மனிதர்கள் என்றே அழைத்தனர். ஆனால் இவர்களை சீன–பூர்வக்குடிகள் என்று வரலாறு கூறுகிறது. ஜேம்ஸ் முதலாவது இவர்களது மொழியைக் கற்க அரம்பித்ததோடு தாய்மொழியில் அவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்ல ஆரம்பித்தார். இவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டதே இல்லை. ஜேம்ஸ் பிரேசர் தனது உடைப்பழக்கத்திலும், லிசு பழங்குடிகளின் ஆடை அலங்காரத்தையே பின்பற்றினார். சுவிசேஷத்தால் கவரப்பட்ட மக்கள் பேய் மேடையை கொளுத்தி விட்டு, இயேசுவைப் பின்பற்றினர். இவர் உணவிலும், பழக்கவழக்கங்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டு, நல் உறவை பலப்படுத்திக் கொண்டார். மழை பெய்யும் வேளைகளிலும், குளிர்ந்த இரவுகளிலும், கழுதைகள், பன்றிகள், கோழிகள் வீட்டுக்குள்ளேதான் இருக்கும். அவற்றின் மத்தியில் அமர்ந்து உணவை சாப்பிட வேண்டும். பிரேசர் அம்மக்களை விமர்சித்தது இல்லை.

1973 ஆம் ஆண்டு, ஏப்ரல் 20ஆம் நாள் டெங்குவே நீர் வீழ்ச்சிக்கு அருகே அவர் தனது முதல் ஞானஸ்நான ஆராதனையை நடத்தினார். இவர் ஊழியத்தின் மூலம் 129 குடும்பங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்டவர்கள் ஆதாயம் பண்ணப்பட்டனர். "மாட்டில்ட் ஹில்" என்ற இடத்தில் ஆலயம் கட்டப்பட்டது. லிசு மொழியில் வேதத்தையும் மொழி பெயர்க்க ஆரம்பித்து, மாற்கு, யோவான் சுவிசேஷத்தை முதலில் மொழிபெயர்த்து முடித்தார். ஊழியப்பயிற்சியும் லிசு மக்களுக்குக் கொடுத்தார். குக் தம்பதியினருடன் சேர்ந்து, முழு புதிய ஏற்பாட்டையும் மொழி பெயர்த்து முடித்தார்.

மிஷனெரி ஊழியத்தில் மூழ்கியிருந்த ஜேம்ஸ் பிரேசருக்கு தனது மணவாழ்க்கையைப் பற்றி தீவிரமாய் யோசிக்க நேரம் கிடைக்கவில்லை. தனது 43வது வயதில் (1929 ஆம் ஆண்டு) ஊழியத் தம்பதியினரின் மகளான ராக்சியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். குடும்பமாக தேவ பணியை செய்தனர். கேத்ரின், எய்லின் என்ற இரண்டு பெண் மக்களை தேவன் தந்து ஆசீர்வதித்தார்.

ஜேம்ஸ் பிரேசருக்கு திடீரென மலேரியா ஜுரம் வந்தது. அதைக் கண்டறிவதற்குள் மலேரியா கிரிமிகள் அவரது மூளையைத் தாக்கியிருந்தன. தொடர்ந்து இரண்டு நாட்கள் கடுமையான காய்ச்சலினால் கஷ்டப்பட்ட அவர் சுய நினைவிழந்தார். 1938ஆம் ஆண்டு செப்டம்பர் 25–ம் நாள் ஜேம்ஸ் தனது 52வது வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து, பரமனின் பாதத்தில் இளைப்பாறச் சென்றார்.

கடந்த 60 ஆண்டுகளில் (1948 முதல் 2008 வரை) இந்தியாவில் இருந்து வெளிநாடுகளில் குவிக்கப்பட்ட கறுப்பு பணத்தின் மொத்த மதிப்பு ரூ.20 லட்சம் கோடி என அமெரிக்க நிதி ஆலோசனை நிறுவன ஆய்வு தெரிவிக்கிறது. வாஷிங்டனை சேர்ந்த நிறுவனம், குளோபல் பைனான்சியல் இன்டெக்ரிடி (ஜிஎப்ஐ) அது **"இந்தியாவில் இருந்து 1948 முதல் 2008 வரை சட்டவிரோத பண புழக்கம்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் 19.11.2010 அன்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. வடக்கு சுமத்ரா தீவில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.6 ஆக பதிவாகியுள்ளது. மேலும் இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து உடனடி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இலங்கையில் ஹம்பன்தொட்டா என்ற இடத்தில் சீனா உதவியோடு புதிய துறைமுகம் கட்டப்பட்டு வந்தது. ரூ.2 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அந்த துறைமுகம் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. கடற்படை கப்பல் ஒன்றும், அதன் பிறகு வேறு இரண்டு கப்பல்களும் அந்த துறைமுகத்துக்குள் வந்தன. தொடக்க விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ராஜபக்சே, "இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதே எனது குறிக்கோள்" என்று கூறினார்.

பிரசித்தி பெற்ற, இந்திரா காந்தி சமாதான விருது, இந்த ஆண்டு பிரேசில் நாட்டு ஜனாதிபதி லூலா டா சில்வாவுக்கு வழங்கப்படுகிறது. பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான கமிட்டி நேற்று கூடி இந்த அறிவிப்பை வெளியிட்டது. பிரேசில் நாட்டில் உணவு பஞ்சத்தை போக்கியதற்காகவும், நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு சென்றதற்காகவும், வளர்ச்சி அடையும் நாடுகளுடன் நல்லுறவு கொண்டு செயலாற்றியதற்காகவும் இந்த விருது, லூலா டா சில்வாவுக்கு வழங்கப்படுகிறது.

"மும்பையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ரெயில் நிலையம், தாஜ் ஓட்டல் உள்ளிட்ட பகுதிகளில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அதிரடியாக புகுந்து சரமாரியாக சுட்டதில் சுமார் 200 பேர் பலியாகினர். இந்த நிலையில், மும்பையை போலவே ஜெர்மனியிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர்" என்று உள்துறை மந்திரி தகவல் அளித்துள்ளார்.

நன்றி : http://www.dinakaran.com

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`
Phone: 0461 - 2375468
Cell : 9345675468


பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in  website : www.shalommission.in**


ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் 2010
எங்கள் தலைமுறையில் 1 கோடி பீல் மக்களையும் இரட்சியும் என்று ஆத்தும பாரத்துடன் ஜெபிக்கும் ஊழியர்கள்
பீல் மக்களின்
இரட்சிப்பிற்காக
அழுது ஜெபிக்கும்
சகோ. மோகன் சி. லாசரஸ்
அவர்கள்

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month




Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss